செய்தி வெளியீடு எண்:392 நாள் : 02.08.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(2.8.2016)** தலைமைச் செயலகத்தில், சவுதி அரேபியாவில் பணிபுரிந்த இடத்தில் ஏற்பட்ட கொடுமையிலிருந்து தப்பிப்பதற்காக, வீட்டு பால்கனியிலிருந்து குதித்ததில் முதுகு தண்டுவடத்தில் பலத்த காயமடைந்த திருமதி தாட்சாயிணிக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் நிரந்தர வைப்பு தொகையாக வைக்கப்பட்ட 10 லட்சம் ரூபாய்க்கான ஆவணத்தை வழங்கினார்கள்.

சென்னை, தண்டையார்பேட்டையைச் சேர்ந்த திருமதி தாட்சாயிணி அவர்கள், சவுதி அரேபியாவில் பணிக்குச்சென்று அங்கு பணிபுரிந்த இடத்தில் ஏற்பட்ட கொடுமையிலிருந்து தப்பிப்பதற்காக, வீட்டு பால்கனியிலிருந்து குதித்ததில், முதுகு தண்டுவடத்தில் பலத்த காயமடைந்து சவுதி அரேபியாவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அங்குள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் 16.6.2016 அன்று சென்னைக்கு அனுப்பப்பட்டு, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். திருமதி தாட்சாயிணி முதுகு தண்டுவடத்தில் பலத்த காயமடைந்த செய்தி அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திருமதி தாட்சாயிணியின் குடும்ப சூழ்நிலை, உடல்நிலை மற்றும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் வழங்கிடவும், அவருக்கு உயர்தர சிறப்பு சிகிச்சை அளித்திடவும் உத்தரவிட்டார்கள். மேலும், இந்த 10 லட்சம் ரூபாய் திருமதி தாட்சாயிணி பெயரில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு, இந்த வைப்பு நிதியிலிருந்து வட்டியாக மாதந்தோறும் 8,125 ரூபாய் திருமதி தாட்சாயிணி அவர்களுக்கு கிடைக்கப் பெறும் என்று **17.6.2016** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி, திருமதி தாட்சாயிணி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் நிரந்தர வைப்பு தொகையாக வைக்கப்பட்ட 10 லட்சம் ரூபாய்க்கான ஆவணத்தை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நிதியுதவியை பெற்றுக் கொண்ட திருமதி தாட்சாயிணி அவர்கள், தனது உடல்நிலை, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு தாயுள்ளத்துடன் உதவிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்வின்போது திருமதி தாட்சாயிணியின் தாயார் உடனிருந்தார்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 2.8.2016**